பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–4–2005) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

94. 13–4–1995 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கை எண்II (2) ஆர்.யு. எல்/1439 (பி-II) /95–க்குத் திருத்தம் செய்தும், (ii) 28–1–2004 முதல் நடைமுறைக்கு வருமாறு குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சியினை ஏற்படுத்தியும், (iii) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சிக்குப் பொதுத் தேர்தல் நடந்த பின்னர் இதனுடைய முதல் கூட்டத்தினைக் கூட்டும் வரை கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சியின் பொறுப்புகள் மற்றும் கடமைகளை ஆற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரை சிறப்பு அலுவலராக நியமனம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி (C1) துறையின் 28–1–2004 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

95. 1999–2000 வரையிலான கால அளவிற்கு திருவாளர்கள் தமிழ்நாடு கைத்திறப் பொருட்கள் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்த பித்தளை சலவைப் பெட்டிகள் மீது செலுத்த வேண்டிய வரி வேறுபாட்டுத் தொகை மற்றும் அபராதத் தொகையினைத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 7–1–2005 ஆம் நாளிட்ட 5 (D) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டிலுள்ள திருவாளர்கள் க்ஷேமா மறுவாழ்வு பயிற்சி மையம் 1–7–2003 முதல்

31–3–2006 வரையிலான கால அளவில் நடத்தும் பயிற்சி வகுப்பின்போது தயாரிக்கும் பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–1–2005 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

97. திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பொருட்களான சிமெண்ட், ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் மடிப்புத் தகடுகள், சிமெண்ட் பொருட்கள், ஆஸ்பெஸ்டாஸ் பொருட்கள், ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் பொருட்கள் ஆகியவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் நிவாரணப் பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக விற்பனை செய்யும்போது, அந்த விற்பனைத் தொகைக்கு இவ்வறிவிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உறுதிமொழியினை அளிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 7–2–2005 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. திருவாளர்கள் இந்தோ–பர்மா பெட்ரோலியம் லிமிடெட் நிறுவனம், மாநிலங்களுக்கிடையே வர்த்தகம் அல்லது வணிக நடைமுறையில் செய்யப்படும் நேரடி விற்பனை அல்லது கொள்முதல் நீங்கலாக, (i) முதல் விவர அட்டவணையில் பகுதி–D, பகுதி–E, பகுதி–F மற்றும் பகுதி–G-இல் குறிப்பிட்ட சில இனங்கள் குறித்த பொருட்கள் (ii) முதல் விவர அட்டவணையில் பகுதி G-இல் குறிப்பிட்டுள்ள பெட்ரோலிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் (iii) உயர் வேக டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநிலத்திற்கு வெளியே அனுப்பியவற்றிற்கு விற்பனை வரிச் சட்டம், 7–A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்து வணிக வரித் துறையின் 25–1–2005 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. மேற்குறிப்பிட்ட இனம் (i) 12–3–1993 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும், இனங்கள் (ii) மற்றும் (iii) 1–4–2002 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும்

2005 ஏப்ரல் 5]

செயலுக்கு வரும். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

99. 25–1–2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (*1*) (வவ)/*6* (e–*1*)/*2005* ஆம் எண்ணிட்ட வணிக வரித் துறையின் அறிவிக்கையை ரத்துச் செய்தும், இந்தோ–பர்மா பெட்ரோலியம் கம்பெனி லிமிடெட் நிறுவனம், மாநிலங்களுக்கிடையே மேற்கொள்ளும் வர்த்தக அல்லது வணிக நடைமுறையில் செய்யப்படும் விற்பனை அல்லது கொள்முதலின் நேரடிப் பலன் நீங்கலான, முதலாவது விவர அட்டவணையில் பகுதி D, பகுதி E, பகுதி F மற்றும் பகுதி G-இல் குறிப்பிட்ட சில இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைக் கொள்முதல் செய்து, அவற்றை மாநிலத்திற்கு வெளியே அனுப்புவதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தின் *7*–A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியைக் குறைத்தும், இது *12–12–1990* ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும் என்று வணிக வரித் துறையின் *14–2–2005* ஆம் நாளிட்ட *13* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

100. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் *2003–2004* ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [*1995* ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1996*) *109 (4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் *10*–வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2005–2006.* (தமிழ், ஆங்கிலம்)

191. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. *(2003–2005)*

192. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை).